09.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால் அணைகளின் நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. ஒரே நாளில் பாபநாசம் அணை நீர்மட்டம் 3 அடியும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 7 அடியும் உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் தென்மேற்குப் பருவ மழை தொடங்கியுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் புதன்கிழமை அதிகாலையிலிருந்து பரவலாக மழை பெய்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த பலத்த மழையால் அணைகளின் நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது.

புதன்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக கன்னடியன் அணைக்கட்டில் 30 மி.மீ மழை பதிவானது. பிற இடங்களில் மழையளவு (மில்லி மீட்டரில்):

பாபநாசம் அணை - 27, பாபநாசம் கீழ் அணை - 13, சேர்வலாறு அணை - 9, மணிமுத்தாறு அணை - 5, குண்டாறு அணை - 13, அடவிநயினார் அணை - 11, கொடுமுடியாறு அணை - 20, பாளையங்கோட்டை - 8, திருநெல்வேலி - 3, அம்பாசமுத்திரம் - 18.4, சேரன்மகாதேவி - 14.2, களக்காடு - 6.2, தென்காசி - 6.4, செங்கோட்டை - 9, ஆலங்குளம் - 1.4, ஆய்க்குடி - 10.2, ராதாபுரம் - 3, நான்குனேரி - 2.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 2,101.50 கனஅடியும், சேர்வலாறு அணைக்கு 1,900 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 34 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

எதிர்பார்த்தவாறு பருவமழை தொடங்கி அணைகளுக்கு நீர்வரத்து இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

ஒரே நாளில் பாபநாசம் அணை நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 67.90 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 6.82 அடி உயர்ந்து 84.84 அடியாகவும் உள்ளது.

பிற அணை நீர்மட்ட நிலவரம்: மணிமுத்தாறு அணை - 73.20 அடி, கடனாநதி அணை - 27.90 அடி, ராமநதி அணை - 25, கருப்பாநதி அணை - 24.94, குண்டாறு அணை - 11.80, அடவிநயினார் அணை - 35, வடக்குப் பச்சையாறு அணை - 23.40, நம்பியாறு அணை - 12.76, கொடுமுடியாறு அணை - 2.50.

குடிநீருக்காக பாபநாசம் அணையில் 104.75 கனஅடி, மணிமுத்தாறு அணையில் 200 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பெருங்கால் பாசனத்துக்கு மணிமுத்தாறு அணையிலிருந்து 45 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

**பூந்தமல்லியில் 59 மி.மீ. மழை**

திருவள்ளூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு பெய்த பலத்த மழையின்போது, அதிகபட்சமாக பூந்தமல்லியில் 59 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணி முதல் பரவலாக இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் பூமி குளிர்ந்து சில்லென்ற காற்று வீசியது.

மேலும் இரவெல்லாம் மழை பெய்ததால், கடுமையாக வாட்டி வந்த வெப்பம் மறைந்து, புதன்கிழமை காலை முதல் மாலை வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இந்த மழை காரணமாக, திருவள்ளூர் நகராட்சிக்கு உள்பட்ட பாதாள சாக்கடைப் பணி முடிவடைந்து சாலை சீரமைக்கப்படாத பகுதிகளில் தெருக்கள் சகதியானது. இதனால் மக்கள் அவதிக்குள்ளாகினர்.

மாவட்டத்தில் மழை அளவு (மி.மீ.): பொன்னேரி- 25, ஊத்துக்கோட்டை- 9, பள்ளிப்பட்டு- 50, கும்மிடிப்பூண்டி- 18, திருத்தணி- 35, திருவள்ளூர்- 23, பூந்தமல்லி- 59, அம்பத்தூர்- 31, பூண்டி- 6, செம்பரம்பாக்கம்- 12, சோழவரம்- 36, தாமரைப்பாக்கம்- 29, ஆர்.கே.பேட்டை- 26, திருவாலங்காடு- 9, செங்குன்றம்- 21.60.

## பூம்பாறை கிராமத்தில் பூண்டு விளைச்சல் ஆய்வு

கொடைக்கானல் அருகே பூம்பாறை கிராமத்தில் செவ்வாய்க்கிழமை பூண்டு விளைச்சல் குறித்து ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ஆய்வு நடத்தினார்.

கொடைக்கானல் மேல்மலைப் பகுதியான பூம்பாறையில் பூண்டு சாகுபடி செய்யும் விவசாயிகளை புணேவிலுள்ள மத்திய வெங்காயம் மற்றும் பூண்டு ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ஜெய்கோபால் சந்தித்து கொடைக்கானல் மலைப்பகுதியில் சாகுபடி செய்யும் மேட்டுப்பாளையம், சிங்கப்பூர் பூண்டு ரகங்கள் குறித்து கேட்டறிந்தார்.

பூண்டு சாகுபடியில், அதிக மகசூல் எடுப்பது உள்ளிட்ட விவசாயிகளின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். இந்நிகழ்ச்சியில் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பேராசிரியர் சத்தியமூர்த்தி, காய்கறித் துறையைச் சேர்ந்த உதவிப் பேராசிரியர் ஹரீஷ், கொடைக்கானல் தோட்டக் கலை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் சீனிவாசன், தோட்டக் கலை துணை இயக்குநர் மோகன்ராம் மற்றும் பூண்டு விவசாயிகள் பங்கேற்றனர்.

## குன்னூரில் பரவலாக மழை

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதன்கிழமை காலை முதல் இரவு வரை பரவலாக மழை பெய்தது.

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாள்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது மூடுபனியும் உருவானது. இந்நிலையில், கடந்த இரு நாள்களுக்கு முன்பு திடீரென சாரல் மழை பெய்தது. இதைத் தொடர்ந்து, புதன்கிழமை காலை பெய்யத் தொடங்கிய மழை இரவு வரை நீடித்தது. ரேலியா அணைப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர் மட்டம் கணிசமான அளவு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ரூ.5 லட்சத்துக்குப் பருத்தி ஏலம்

அவிநாசியில் ரூ.5 லட்சத்துக்குப் பருத்தி ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

அவிநாசி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 300 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன. இதில், ஆர்.சி.எச் ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.4,900 முதல் ரூ.5,350 வரையிலும், மட்ட ரகப்

பருத்தி ரூ.1,400 முதல் ரூ.1,850 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.5 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 42 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 5 பருத்தி வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

**தக்காளி விலை கடும் உயர்வு**

சந்தைக்கு வரத்து குறைந்து அதே சமயம் தேவை அதிகரித்து இருப்பதால் தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

தக்காளி ஒரு கிலோ ரூ.60-க்கும், 12 கிலோ கொண்ட ஒரு பெட்டி ரூ.700-க்கும் கடந்த வாரம் விற்கப்பட்டது. வழக்கமாக, பல்லடம், திருப்பூர் தென்னம்பாளையம் உழவர் சந்தைக்கு பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை ஒன்றியப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். தக்காளி விளைச்சல் குறைவால் சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளது. அதே சமயம் சுப முகூர்த்தம், கோயில் கும்பாபிஷேகம், ரமலான் நோன்பு துவக்கம் ஆகியவற்றால் தக்காளி தேவை அதிகரித்துள்ளது. ஆனால், அதற்கேற்ப வரத்து இல்லாததால் தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. 15 கிலோ கொண்ட ஒரு பெட்டி தக்காளி ரூ.600-க்கு விற்றது, புதன்கிழமை ரூ.700 ஆக உயர்ந்தது. சில்லறை விற்பனையில் ஒரு கிலோ தக்காளி ரூ.70 வரை விற்பனையாகிறது. இந்த விலை உயர்வால் வீடுகள், ஹோட்டல்களில் தக்காளி பயன்பாடு குறைக்கப்பட்டுள்ளது. தற்போதுதான் தக்காளி நடவு செய்யும் பணி துவங்கி இருப்பதால் ஒரு மாதத்தில் புதிய தக்காளி வரத்து அதிகரிக்கும்போது விலை குறையும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். வெளி மாவட்ட மற்றும் மாநில தக்காளி வரத்து அதிகரித்தால் மட்டுமே தற்போதைய விலை உயர்வு குறையக்கூடிய வாய்ப்பு உள்ளது.

## பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வெள்ளைக்கொடி வெற்றிலை விலை உயர்வு

பரமத்தி வேலூர் வெற்றிலை ஏல சந்தையில் வெள்ளைக்கொடி வெற்றிலையின் விலை உயர்ந்தும், கற்பூரி வெற்றிலையின் விலை சரிவடைந்தும் உள்ளது.

பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் வெற்றிலைகள் கர்நாடகம், கேரளம், குஜராத், மகாராஷ்டிரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம்,கோவை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.6 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்துக்கும் ஏலம் போனது. புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.8 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்து 300-க்கும் ஏலம் போனது.

## ஜூன் 14-இல் பரண்மேல் ஆடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் பரண்மேல் ஆடு வளர்ப்பு என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி வரும் 14-ஆம் தேதி நடைபெறுகிறது.

வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் என்.அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இப் பயிற்சியில் கலப்பின வெள்ளாட்டினங்கள், அவற்றைத் தேர்வு செய்யும் முறைகள், கொட்டகை அமைக்கும் வழிமுறைகள், பரண்மேல் ஆடு வளர்ப்பில் உள்ள சாதக, பாதகங்கள், பரண் மேல் வளர்க்கும் முறைகள் குறித்து விளக்கப்படும்.

மேலும், பசுந்தீவனம், உலர் தீவனம் தயாரிக்கும் முறைகள், தீவன மேலாண்மை, நல மேலாண்மை, நோய் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கப்படும்.

இப் பயிற்சியில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வம் உள்ளவர்கள் பங்கேற்கலாம். விருப்பம் உள்ளவர்கள், கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும், வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286- 266345, 266650 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு வரும் 13-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செம்பனார்கோயில் வட்டாரத்தில் குறுவை தொகுப்புத் திட்டம் தொடக்கம்

செம்பனார்கோயில் வட்டாரத்தில் வேளாண் துறை சார்பில், விவசாயிகளுக்கான குறுவை தொகுப்புத் திட்ட நடைமுறைகள் தொடங்கின.

ஜூன் 1-ஆம் தேதி முதல் அரசின் குறுவை தொகுப்புத் திட்டம் நடைமுறைபடுத்தப்படுகிறது. இதன்படி 12 மணி நேரம் மும்முனை மின்சாரம், நடவு இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 4 ஆயிரம் மானியம், நூறு சதவீத மானியத்தில் நீர் பாசனத்திற்காக எச்.டி.பி.இ. குழாய்கள், ஏக்கருக்கு 5 கிலோ வீதம் நெல் நுண்சத்து, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் துத்தநாக சல்பேட், பயறு சாகுபடியை ஊக்குவிக்க ஒரு ஏக்கருக்கு விதைக்கு ரூ.900, உழவுக்கு ரூ.500 என மொத்தம் ரூ.1,400, வெண்ணாறு பகுதிகளில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.1,900 ஆகியவை வழங்கப்படுகின்றன. செம்பனார்கோயில் வட்டாரத்தில் 16 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடத்த திட்டமிடப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக செம்பனார்கோயில் வேளாண்மை உதவி இயக்குநர் சோ.வெற்றிவேலன் தெரிவித்தார்.

செம்பனார்கோயில் அருகே ஆறுபாதி கிராமத்தில் ப.கல்யாணம் வயலில் எம்டியு-6 என்ற நெல் ரகத்தின் பாய் நாற்றாங்காலை கொண்டு இயந்திரம் மூலம் நடவு செய்வதை வேளாண்மை உதவி இயக்குநர் சோ.வெற்றிவேலன் புதன்கிழமை நேரில் பார்வையிட்டார். பின்னர் அவர் கூறியது: செம்பனார்கோயில் வட்டாரத்தில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் இயந்திர மூலம் நடவு செய்யப்படும். இந்த முறையில் நடவு செய்யும் விவசாயிகளுக்கான மானியத் தொகை, அவர்களது

வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். 4 ஆயிரத்து 400 ஏக்கருக்கு கொடுக்கும் வகையில் நெல் நுண்சத்து உரம் 28 மெட்ரிக் டன் இருப்புள்ளது. எச்டிபிஇ குழாய்கள் ஒரு யூனிட்டுக்கு 30 குழாய்கள் வீதம் 50 யூனிட்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2 ஆயிரம் ஏக்கரில் நடவு செய்யும் அளவுக்கு தேவையான பாய் நாற்றாங்கால் தயாராகவுள்ளன. வேளாண் விரிவாக்க மையங்களில் பராமரிக்கப்படும் முன்னுரிமை பதிவேட்டில் விவசாயிகள் உடனடியாக பதிவு செய்து இத்திட்டத்தின் பயன்களை பெற்றுக் கொள்ளலாம் என்றார் அவர்.

துணை வேளாண் அலுவலர் ஆர்.ரவிச்சந்திரன், உதவி வேளாண் அலுவலர்கள் ஆர்.சந்திரசேகரன், எம்.ரவிச்சந்திரன், ஆத்மா திட்ட அலுவலர்கள் சி.திருமுருகன், சி.பார்த்திபன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## விழுப்புரத்துக்கு 1,200 டன் சன்னரக அரிசி

நீடாமங்கலத்திலிருந்து விழுப்புரத்துக்கு 1,200 டன் சன்னரக அரிசி பொது விநியோகத் திட்டத்துக்காக சரக்கு ரயிலில் புதன்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றிலிருந்து 96 லாரிகளில் 1,200 டன் சன்னரக அரிசி நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு புதன்கிழமை கொண்டுவரப்பட்டது. நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் சுமைதூக்கும் தொழிலாளர்கள் 80 பேர் அரிசி மூட்டைகளை சரக்கு ரயிலின் 20 பெட்டிகளில் ஏற்றினர்.

இதைத்தொடர்ந்து, அரிசி மூட்டைகள் பொது விநியோகத் திட்டத்துக்காக விழுப்புரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விற்பனையகம் தொடக்கம்

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் விற்பனையகம் செவ்வாய்க்கிழமை தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் புதிய ரகங்கள் வெளியிடப்படுகின்றன. இதனை விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் உபயோகித்து பயன்பெறுவதற்காக திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையம் நெல்லில்- டிகேஎம் -13,டிஆர்ஒய்- 3, உளுந்தில் எம்டிவி-1, பச்சை பயிறில் சிஒ-8 போன்ற புதிய ரகங்களை விதை உற்பத்தி செய்து விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலும், வேளாண்மை அறிவியல் நிலையம் வேளாண்மை குறித்த பல்வேறு பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளித்து வருகிறது. இதன் அடிப்படையில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் உயர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, நோய் எதிர்ப்பு கொல்லிகளான டிரைகோடெரிமா விரிடி, சூடோமோனாஸ் புளோரசன்ஸ் மற்றும் பயிர் ஊக்கிகளான பயிர் வொண்டர், நிலக்கடலை ரிச், மக்காச்சோளம் மேக்சிம், கரும்பு பூஸ்டர், தென்னை டானிக் ஆகியவற்றை விற்பனைக்காக வைத்துள்ளது.

மேலும் நெல், கரும்பு, சிறு தானியங்தளுக்கான நுண்ணூட்ட கலவையும் கிடைக்கும். ஒவ்வொரு ஆண்டும் இங்கு தொழில் முனைவோருக்கு காளாண் உற்பத்தி, மண்புழு உற்பத்தி, புறக்கடை கோழி வளர்ப்பு போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதற்குத் தேவையான மூலப்பொருள்களான காளாண் வித்து, மண்புழு போன்றவை இவ்விற்பனையகம் மூலம் பெறலாம். மேலும், வேளாண் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மற்றும் குறுந்தகடுகள் இங்கு கிடைக்கும்.

## பெங்களூரில் நாளை வேளாண் பொருள்கள் கண்காட்சி

பெங்களூரில் உணவு, வேளாண் உற்பத்தி பொருள்கள் கண்காட்சி வியாழக்கிழமை (ஜூன் 9) தொடங்குகிறது.

இதுகுறித்து பெங்களூரில் செவ்வாய்க்கிழமை கிரான்பெரி நிறுவனத்தின் இந்திய பிரதிநிதி கெய்த் சுன்டர்லால் செய்தியாளர்களிடம் கூறியது:

உணவுக்கும், வேளாண் உற்பத்தி பொருள்களுக்கும் சிறந்த நாடாக இந்தியா விளங்குகிறது. இதை கருத்தில் கொண்டு சர்வதேச அளவிலான உணவு, வேளாண்

உற்பத்தி பொருள்களின் கண்காட்சியை பெங்களூரில் நடத்த முடிவு செய்துள்ளோம்.

ஜூன் 9-ஆம் தேதி தொடங்கி 11-ஆம் தேதி வரை ஹெப்பால் மான்யதா தொழில்நுட்பப் பூங்கா ஒயிட் ஆர்கிட் மாநாட்டு அரங்கில் உணவு, வேளாண் உற்பத்தி பொருள்கள் கண்காட்சி 3 நாள்கள் நடைபெறுகிறது.

இதில் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் புகழ்பெற்று விளங்கும் உணவு, வேளாண் உற்பத்தி பொருள்கள் இடம்பெற உள்ளன.

சர்வதேச அளவில் புகழ் பெற்ற விவசாயிகள், சமையலர்கள் இந்த கண்காட்சியில் கலந்து கொள்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 202 கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை காலை நொடிக்கு 202 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 150 கன அடிக்கும் குறைவாக இருந்து வந்தது. மேலும், கடந்த சில வாரங்களாக 100 கன அடிக்கு கீழாக நீர்வரத்துக் குறைந்தது. இந்த நிலையில் மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும், பாலாற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் லேசான அளவில் மழை பெய்து வருகிறது. இதனால் புதன்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 202 கனஅடியாக அதிகரித்துள்ளது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் 44.52 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 202 கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. குடிநீர்த் தேவைக்கு அணையிலிருந்து நொடிக்கு 1,200 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர்இருப்பு 14.53 டி.எம்.சி.யாக இருந்தது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சூடான ஜூன்

ஜூன் மாதம் 'ராமகுண்டம்' அட்சய கோட்டுக்கு வடக்கே இருபத்திரண்டரை டிகிரி வருவதால் வெப்பநிலை மற்ற எல்லா மாதங்களையும் விட அதிகமாக உள்ளது. எனவே இந்தியாவின் 'மிக வெப்பமான இடம்' என்ற பெயரைப் பெற்றுள்ளது. ஆந்திர பிரிவினையால் தற்போது தெலுங்கானாவில் ராமகுண்டம் உள்ளது. கலீம்நகர் மாவட்டத்தில் இந்த நகரம் உள்ளது. சில நேரங்களில் ராமகுண்டத்தில் வெப்பமானி வெடிக்கும் அளவிற்கு வெப்பம் இருக்கும். ராமர் யாகம் வளர்த்த இடம். எனவே ராமகுண்டம் எனப் பெயர். யாகத்தின் வெப்பமே இன்றும் வெப்பத்திற்கு காரணம் என்பது உள்ளூர் மக்களின் நம்பிக்கை

### இயற்கை விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு பயிற்சி

கோபி: கோபி வேளாண் அறிவியல் நிலையத்தில், இயற்கை விவசாயம் குறித்த தொழிற்பயிற்சி நேற்று துவங்கியது. இந்த மூன்று நாள் பயிற்சி முகாமை, திட்ட ஒருங்கிணைப்பாளர் அழகேசன் துவக்கி வைத்தார். பெருந்துறை, டி.என்.,பாளையம், அந்தியூர், தாளவாடி பகுதியை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். இதில், இயற்கை விவசாயம், உயிர் உரம் தயாரித்தல், கிராமங்களில் வேளாண் தொழிலை ஊக்குவிப்பது என்பன குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்கள், மாதிரி பண்ணை உருவாக்கி, அதன் மூலம் மற்ற விவசாயிகளை ஊக்குவிப்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

## கருப்பு சுண்டல் வரத்து கடும் சரிவு: கிலோவுக்கு ரூ.16 வரை உயர்வு

ஈரோடு: வறட்சியால், கருப்பு சுண்டல் வரத்து சரிந்துள்ள நிலையில், கிலோவுக்கு, 16 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

கருப்பு சுண்டலில் இருந்து, பொட்டுக்கடலை, கடலை பருப்பு, கடலை மாவு போன்றவை தயாரிக்கப்படுகிறது. இவை, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்து, அதிகமாக வரத்தாகும். மழையின்மை, வறட்சி ஆகியவற்றால், வரத்து சரிந்து, இதன் விலை உயர்ந்துள்ளது.

இதுபற்றி, ஈரோடு கொங்காலம்மன் அனைத்து வியாபாரிகள் சங்க துணைத்தலைவர் விமல் கூறியதாவது: கடந்த மார்ச்சில், 100 கிலோ கருப்பு சுண்டல் மூட்டை, 4,900 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, 1,600 ரூபாய் உயர்ந்து, 6,500 ரூபாய்க்கு விற்கிறது. அதுபோல, நயம் கருப்பு சுண்டல், 5,900 ரூபாயில் இருந்து, 7,500 ரூபாயாக உயர்ந்துள்ளது. கிலோவுக்கு, 16 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.ஆயுத பூஜைக்கு கருப்பு சுண்டல், பொட்டுக்கடலையின் தேவையும், தீபாவளிக்கு பொட்டுக்கடலை, கடலை மாவு ஆகியவற்றின் தேவையும் அதிகமாக இருக்கும். எனவே, தீபாவளி சமயத்தில், சாதா கருப்பு சுண்டலின் விலை, 7,200 முதல், 7,500 ரூபாய் வரையிலும், நயம் கருப்பு சுண்டல், 8,000 முதல், 8,500 ரூபாய் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தாண்டு, இதே நேரம் சில்லறை விலையில் கிலோ, 75 ரூபாய்க்கு விற்றது. தற்போது, 95 ரூபாய் வரையிலான விலையில் விற்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**மூணாறில் கொட்டுது பலத்த மழை**

மூணாறு : கேரளாவில் தென் மேற்கு பருவ மழை நேற்று துவங்கியது.இதன் தொடர்ச்சியாக ,மூணாறில் பலத்த மழை பெய்து வருகிறது.

கேரளாவில் தென் மேற்கு பருவ மழை கடந்தாண்டு, வழக்கத்தைக் காட்டிலும் சற்று தாமதமாக துவங்கியது. ஆனால் இந்தாண்டு வானிலை ஆய்வு மையம் அறிவித்தது போன்று, நேற்று பருவ மழை துவங்கியது. இதனால் மூணாறில் கடந்த சில நாட்களாக கோடை மழை போன்று விட்டு, விட்டு பெய்த வந்த மழை நேற்று வலுவடைந்தது.நேற்று முன்தினம் இரவு முதல் தொடர்ந்து மழை பெய்ததால், நேற்று பகலில் சற்று குளிரும் காணப்பட்டது. கடந்தாண்டு (செ.மீட்டரில்) ஏப்ரல் 27.33, மே 13.28, ஜூன் 1ம் தேதி முதல் 8ம் தேதி வரை 6.52 மழை பதிவானது.இந்தாண்டு ஏப்ரல் 10.5, மே 19.91, ஜூனில் நேற்று வரை 6.83 மழை பதிவானது. இது கடந்தாண்டைக் காட்டிலும் 10.14 செ.மீ., குறைவாகும். இந்தாண்டு தென் மேற்கு பருவ மழை வழக்கத்தைக்காட்டிலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மா, பலா ஏலத்துக்கான ஒப்பந்த தேதி மாற்றம்**

கருமந்துறை: கருமந்துறை பழப்பண்ணையில், மா, பலா மற்றும் தேங்காய் ஏலத்திற்கான, ஒப்பந்த தேதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது. சேலம் தோட்டக்கலை துறை இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: அரசு தோட்டக்கலைத்துறை பண்ணை, கருமந்துறை, மணியார்குண்டம் உள்ளிட்ட பண்ணைகளில் உள்ள மா, பலா மற்றும் தேங்காய் ஆகியவற்றின், 2016 - 17ம் ஆண்டிற்கான ஏலத்துக்கு, தோட்டக்கலைத்துறை இயக்குனர் அலுவலகத்தில், விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. 10ம் தேதி, ஒப்பந்தம் கோரப்படும் என, அறிவிக்கப்பட்டது. நிர்வாக காரணத்தால், 13ம் தேதி ஒப்பந்தம் கோரப்படும்.

## மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 204 கனஅடியாக அதிகரித்தது. தமிழக-கர்நாடகா எல்லைப்பகுதியிலுள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதியில் நேற்று முன்தினம் பருவமழை தீவிரம் அடைந்தது. இதனால், வினாடிக்கு, 88 கனஅடியாக இருந்த மேட்டூர்அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 204 கனஅடியாக உயர்ந்தது. நேற்று நீர்மட்டம், 44.52 அடியாகவும், நீர் இருப்பு, 14.53 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 1,200 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## தக்காளி கிலோ ரூ.80க்கு விற்பனை

நாமக்கல் : நாமக்கல்லில் தக்காளி விலை உயர்ந்து ஒரு கிலோ ரூ.80க்கு விற்பனையாகிறது. தமிழகத்தில் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. கோடை வெயிலுக்கு பின்னரும், கடந்த சில வாரங்களாக சுட்டெரித்த வெயிலின் காரணமாக தக்காளி பயிர் பாதிக்கப்பட்டது. கடுமையான வெப்பத்தின் காரணமாக நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் இருந்து தக்காளி சந்தைக்கு வருவது வெகுவாக குறைந்துவிட்டது.

வெப்பத்தின் காரணமாக தக்காளி பயிரில் பூக்கள் உதிர்ந்து காய்ந்துவிட்டன. இதனால் தக்காளி உற்பத்தி குறைந்துவிட்டது. தற்போது பெங்களூரு, ஒசூர் பகுதியில் இருந்து அதிக அளவில் தினமும் தக்காளி நாமக்கல் கொண்டு வரப்படுகிறது. ஒரு கிலோ ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனையாகிறது. தக்காளியின் விலையை கேட்டு மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். நாமக்கல்

உழவர் சந்தைக்கு தக்காளி வரத்து கடந்த இரண்டு வாரமாக அடியோடு நின்று விட்டது. இதனால், உழவர் சந்தையின் வெளிப்புறங்களில் உள்ள கடைகளில் தக்காளி விற்பனை மும்முரமாக நடந்து வருகிறது.

## தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் அதிகாரிகள் விளக்கம்

கிருஷ்ணகிரி : காவேரிப்பட்டணம் மற்றும் பர்கூர் வட்டாரங்களில் தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதல் அதிக அளவில் உள்ளதை வேளாண் அதிகாரிகள் மற்றும் விஞ்ஞானிகள் நேரில் ஆய்வு செய்து, தடுப்பு முறைகள் குறித்து விளக்கம் அளிக்கனர். கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் மற்றும் பர்கூர் வட்டாரங்களில் தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

இதையடுத்து, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சபா நடேசன் அறிவுரைப்படி, வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) திருமுருகு தலைமையில், தமிழ்நாடு வேளாண்மை கழகம் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், வேளாண்மை உதவி இயக்குநர்கள் பர்கூர் கிருஷ்ணமூர்த்தி, காவேரிப்பட்டணம் செந்தில்குமார் ஆகியோர் கொண்ட குழுவினர், அப்பகுதிக்கு சென்று கருந்தலைப்புழுவால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை ஆய்வு செய்தனர்.

இதில் காவேரிப்பட்டணம் அரசம்பட்டி மற்றும் புலியூர் பகுதியில் கருந்தலைப்புழு தாக்குதல் ஆரம்பித்து, மற்ற பகுதிகளுக்கு பரவி வருவது கண்டறிந்தனர். இதையடுத்து தாக்குதலை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட தென்னை மரத்தின் ஓலைகள் மற்றும் மட்டைகளை சேகரித்து எரித்து விட அறிவுரை வழங்கினர். மேலும், முட்டை மற்றும் புழு ஒட்டுண்ணிகளை 3 ஆயிரம் எண்கள் முதல், 4500 எண்கள் வரை மரத்தின் அடிப்பாகத்தில், ஜனவர் மாதம் முதல், மாதம் இரண்டு முறை தாக்குதலின் அறிகுறிகள் குறையும் வரை ஒட்டுண்ணிகளை விட்டு கட்டுப்படுத்தவும், கருந்தலைப்புழு தாக்குதல் அதிகம் உள்ள மரத்தின் அடிப்பாகத்தில் இருந்து 1.5 மீட்டர் உயரத்தில், மரத்தின் தண்டு பாகத்தில்

சாய்வாக துளையிட்டு, அதனுள் மோனோ குரோட்டாபாஸ் 5 மில்லி மருந்தினை ஊற்றிய பின், தாமிர கரைசல் கலந்த களி மண்ணால் துளையினை மூடிவிட வேண்டும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மரங்களுக்கு மோனோ குரோட்டாபாஸ் மருந்தினை வேரில் செலுத்துவதன் மூலம், நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம். பாலிதின் பையில் மோனோ குரோட்டாபாஸ் 10 மில்லி மற்றும் 100 மில்லி தண்ணீர் கலந்த கரைசலில் சாய்வாக வெட்டிய புதிய இளஞ்சிவப்பு நிறமான வேரினை நுழைத்து, வேர்பகுதி மருந்தில் நன்கு மூழ்கி இருக்குமாறு வைத்து கட்ட வேண்டும். 24 மணி நேரத்தில் மருந்து வேரின் மூலம் உறிஞ்சப்படவில்லை எனில், தரமான மற்றொரு புதிய வேரை தேர்வு செய்து, இறுக்கி கட்டி விட வேண்டும்.

வேரின் மூலம் மருந்து செலுத்துவது மற்ற முறைகளை விட எளியது மற்றும் சிறந்த முறையாகும். மருந்து இட்ட 40 நாட்கள் வரை காய் பறிப்பதை தவிர்க்க வேண்டும். மேலும், கருந்தலைப் புழுவால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் இயல்பு நிலைக்கு திரும்ப இயற்கை எரு 50 கிலோ, யூரியா 1.3 கிலோ, சூப்பர் 2 கிலோ, பொட்டாஷ் 2 கிலோ உரமிட்டு நீர்ப்பாய்ச்சவும், வாய்ப்புள்ள இடங்களில் ஊடு பயிராக சணப்பை சாகுபடி செய்ய வேண்டும் என தென்னை விவசாயிகளுக்கு பரிந்துரைத்தனர். இந்த ஆய்வின் போது பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் ஜலாலுதீன் மற்றும் வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

## மாவட்டம் முழுவதும் பரவலாக மழை ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. விவசாயிகள் சாகுபடி பணிகளில் மும்முரம் காட்டியுள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதையொட்டி தர்மபுரி டவுன் ராமாக்காள் ஏரி, இலக்கியம்பட்டி ஏரி, ரெட்ரி ஏரி உள்ளிட்ட ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இலக்கியம்பட்டி ஏரியில் 2 அடி அளவிற்கு நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

மாவட்டத்தில் உள்ள 930 ஏரிகளில் 10க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு நீர் வரத்து துவங்கியுள்ளது. முன்னதாக கோடை மழை காரணமாக கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்திருந்தது. கடந்த சில நாட்களாக தர்மபுரி மாவட்டத்தில் அரூர், பாலக்கோடு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று தர்மபுரி மாவட்டம் முழுவதும் லேசான மழை பெய்தது. தர்மபுரி நகரில் சாரல் மழை பெய்தது. தொடர் மழை காரணமாக தர்மபுரி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## காவேரிப்பட்டணம், பர்கூர் வட்டத்தில் தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதல் வேளாண் அதிகாரிகள் நேரில் ஆய்வு

கிருஷ்ணகிரி : காவேரிப்பட்டணம் மற்றும் பர்கூர் வட்டாரங்களில் தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதல் அதிக அளவில் உள்ளதை வேளாண் அதிகாரிகள் மற்றும் விஞ்ஞானிகள் நேரில் ஆய்வு செய்தனர். கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் மற்றும் பர்கூர் வட்டாரங்களில் தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

இதையடுத்து, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சபா நடேசன் அறிவுரைப்படி, வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) திருமுருகு தலைமையில், தமிழ்நாடு வேளாண்மை கழகம் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், வேளாண்மை உதவி இயக்குநர்கள் பர்கூர் கிருஷ்ணமூர்த்தி, காவேரிப்பட்டணம் செந்தில்குமார் ஆகியோர் கொண்ட குழுவினர், அப்பகுதிக்கு சென்று கருந்தலைப்புழுவால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை ஆய்வு செய்தனர்.

இதில் காவேரிப்பட்டணம் அரசம்பட்டி மற்றும் புலியூர் பகுதியில் கருந்தலைப்புழு தாக்குதல் ஆரம்பித்து, மற்ற பகுதிகளுக்கு பரவி வருவது கண்டறிந்தனர். இதையடுத்து தாக்குதலை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட தென்னை மரத்தின் ஓலைகள் மற்றும் மட்டைகளை சேகரித்து எரித்து விட அறிவுரை வழங்கினர்.

மேலும், முட்டை மற்றும் புழு ஒட்டுண்ணிகளை 3 ஆயிரம் எண்கள் முதல், 4500 எண்கள் வரை மரத்தின் அடிப்பாகத்தில், ஜனவர் மாதம் முதல், மாதம் இரண்டு முறை தாக்குதலின் அறிகுறிகள் குறையும் வரை ஒட்டுண்ணிகளை விட்டு கட்டுப்படுத்தவும், கருந்தலைப்புழு தாக்குதல் அதிகம் உள்ள மரத்தின் அடிப்பாகத்தில் இருந்து 1.5 மீட்டர் உயரத்தில், மரத்தின் தண்டு பாகத்தில் சாய்வாக துளையிட்டு, அதனுள் மோனோ குரோட்டாபாஸ் 5 மில்லி மருந்தினை ஊற்றிய பின், தாமிர கரைசல் கலந்த களி மண்ணால் துளையினை மூடிவிட வேண்டும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மரங்களுக்கு மோனோ குரோட்டாபாஸ் மருந்தினை வேரில் செலுத்துவதன் மூலம், நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம். பாலிதின் பையில் மோனோ குரோட்டாபாஸ் 10 மில்லி மற்றும் 100 மில்லி தண்ணீர் கலந்த கரைசலில் சாய்வாக வெட்டிய புதிய இளஞ்சிவப்பு நிறமான வேரினை நுழைத்து, வேர்பகுதி மருந்தில் நன்கு மூழ்கி இருக்குமாறு வைத்து கட்ட வேண்டும். 24 மணி நேரத்தில் மருந்து வேரின் மூலம் உறிஞ்சப்படவில்லை எனில், தரமான மற்றொரு புதிய வேரை தேர்வு செய்து, இறுக்கி கட்டி விட வேண்டும். வேரின் மூலம் மருந்து செலுத்துவது மற்ற முறைகளை விட எளியது மற்றும் சிறந்த முறையாகும். மருந்து இட்ட 40 நாட்கள் வரை காய் பறிப்பதை தவிர்க்க வேண்டும்.

மேலும், கருந்தலைப் புழுவால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் இயல்பு நிலைக்கு திரும்ப இயற்கை எரு 50 கிலோ, யூரியா 1.3 கிலோ, சூப்பர் 2 கிலோ, பொட்டாஷ் 2 கிலோ உரமிட்டு நீர்ப்பாய்ச்சவும், வாய்ப்புள்ள இடங்களில் ஊடு பயிராக சணப்பை சாகுபடி செய்ய வேண்டும் என தென்னை விவசாயிகளுக்கு பரிந்துரைத்தனர். இந்த ஆய்வின் போது பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் ஜலாலுதீன் மற்றும் வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

## சிறுவாணி அணைப்பகுதியில் மழை

கோவை, : கோவை மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள சிறுவாணி அணையின் நீர் பிடிப்பு பகுதியில் நேற்று பரவலாக மழை பெய்தது. அணைக்கு வரும் நீரோடைகளான முக்தியாறு, பட்டியாறு, வெள்ளிங்கிரி ஓடைகளில் நீர் வர துவங்கியது. அணையில் கடும் வறட்சியால் நீர் எடுக்க முடியாமல், மூடும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் பருவ மழை துவங்கியதால், குடிநீர் வடிகால் வாரியத்தினர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அணையின் நீர் மட்டம் 2 மீட்டர் உயர்ந்தால் தடையின்றி குடிநீர் பெற முடியும். வழக்கமாக, ஜூன் மாதம் அணைப்பகுதியில் சராசரியாக 200 மி.மீ மழை பெய்ய வாய்ப்புள்ளது. இந்த அளவிற்கு மழை பெய்தால் அணை நீர் மட்டம் 4 மீட்டர் வரை உயர்ந்து விடும்.

கோவை ெநாய்யல் ஆற்றின் நீர் பிடிப்பு பகுதிகளான, சிறுவாணி அடிவாரத்திலும் மழை பெய்து வருகிறது. மழை நீடித்தால் ஆற்றில் நீர் வரத்து அதிகரிக்கும். நொய்யல் நீராதாரத்தில் 28 குளம், 20 தடுப்பணை அமைந்துள்ளது. குளம், தடுப்பணைகளில் நீர் வரத்து அதிகரித்தால் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது. கோவை நகர், புறநகர் பகுதிகளில் மழை பெய்து வருவதால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## ரூ.4.93 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அனுப்பர்பாளையம், ; அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் 310 மூட்டைகள் வந்திருந்தன. இதில், ஆர்.சி.எச் ரகம் குவிண்டால் ரூ.4,910 முதல் ரூ.5,350 வரையிலும், மட்ட ரகம் ரூ.1,400 முதல் ரூ.1,850 வரையிலும் ஏலம் போயின. டி.சி.எச். ரகப் பருத்தி வரத்து இல்லை. மொத்தம் ரூ.4.93 லட்சத்துக்கு பருத்தி ஏல வர்த்தகம் நடைபெற்றது.

**பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆழியார் அணையில் தண்ணீர் திறப்பு**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணையிலிருந்து, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு நேற்றுமுதல் தண்ணீர் திறக்கப்பட்டது. வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் திறக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணையிலிருந்து புதிய ஆயக்கட்டு, பழைய ஆயக்கட்டு மற்றும் வேட்டைக்காரன்புதூர்,பொள்ளாச்சி,சேத்துமடை கால்வாய்களுக்கு தண்ணீர் இருப்பை பொறுத்து குறிப்பிட்ட நாளில் திறந்துவிடப்படுகிறது.

ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீர் விவசாயத்துக்கு மட்டுமின்றி குடிநீர் தேவைக்கும் பயன்படுகிறது. இந்த அணையிலிருந்து 2015 ஜூனில் பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த நீர் திறப்பு கடந்த ஏப்ரலுடன் நிறைவடைந்தது.இந்நிலையில், கோடை மழை போதியளவு இல்லாததால், ஆழியார் அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று விவசாயிகள் பொதுப்பணித் துறையிடம் கோரிக்கை வைத்தனர். இதைதொடர்ந்து, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கும், பொள்ளாச்சி மற்றும் வழியோர கிராமங்களுக்கு குடிநீர் தேவைக்கும் தண்ணீர் திறந்துவிட பொதுப்பணித் துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு, அதற்கான கருத்துருவை அரசுக்கு அனுப்பினர். பின்னர், தண்ணீர் திறப்புக்கான உத்தரவு நேற்று முன்தினம் வரப்பெற்றது. இதை தொடர்ந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கும், பொள்ளாச்சி மற்றும் வழியோர கிராமங்களுக்கு குடிநீர் தேவைக்கும் நேற்று மதியம் ஆழியார் அணையில் இருந்து வினாடிக்கு 150 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந் நிகழ்ச்சியில், எம்.பி., மகேந்திரன், துணை சபாநாயகர் ஜெயராமன், மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக், சப்-கலெக்டர் காயத்ரி, வால்பாறை எம்எல்ஏ., கஸ்தூரிவாசு, பொள்ளாச்சி நகராட்சி தலைவர் கிருஷ்ணகுமார், பொதுப்பணித் துறை மாவட்ட தலைமை பொறியாளர் வெங்கடாச்சலம், பிஏபி கண்காணிப்பு பொறியாளர் இளங்கேவன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அணை அருகே உள்ள சிறு புனல் மின்நிலையம் வழியாக திறந்துவிடப்பட்ட தண்ணீர், 1.25 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால் வழியாக வெளியேறி ஆழியார் ஆற்றில் சேர்கிறது. ஆழியார் அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசன பகுதியில் முதல்போகம் மற்றும் இரண்டாம் போக நெல் சாகுபடி மேற்கொள்ளும் வகையில் 2017 ஏப்ரல் வரை 3 ஆயிரத்து 387 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன் மூலமாக பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளான பள்ளிவிளங்கால், அரியாபுரம், கரப்பாடி, பெரியணை, வடக்கலூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 6 ஆயிரத்து 400 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெறும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பெர்சிமென் பழ சீசன் துவக்கம்**

குன்னூர்,: குன்னூர் தோட்டக்கலை துறைக்கு சொந்தமான பழப்பண்ணையில் பல்வேறு வகையிலான பழ மரங்கள் உள்ளது. இதில் சீசனுக்கு ஏற்றார் போல் விளையும் பழங்களை சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்வதுடன், இதன் மூலம் ஜாம், ஜெல்லி உள்ளிட்ட பழ ரசங்களும் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்டு சுற்றுலா தலங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், தற்போது ஜப்பான் நாட்டு தேசிய பழமான பெர்சிமென் பழ சீசன் துவங்கி உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது இப்பண்ணையில் 140 மரங்கள் நடவு செய்யப்பட்டது. இதில் தற்போது 90 மரங்கள் மட்டுமே உள்ளது. இந்த மரத்தில் ஆண்டுதோறும் மே இறுதி முதல் ஜூலை இறுதி வரை சீசன் காலமாகும். பெர்சிமென் பழங்கள் அதிகளவில் காய்த்துள்ளது.

ஆரெஞ்சு பழ வடிவில் தக்காளி போல் காட்சி அளிக்கும் இப்பழத்தில் விட்டமின் சத்துக்கள் அதிகளவில் உள்ளது. இப்பழம் தமிழகத்தில் குன்னூர் சிம்ஸ்பூங்காவிலுள்ள பழப்பண்னையில் மட்டுமே பயிரிடப்பட்டு வருகிறது. இப்பழத்தை பறித்து எத்தனால் திரவத்தில் போட்டு நன்கு ஊற வைத்த பின்னர் 2

நாள் கழித்து அதனை சுத்தம் செய்து சாப்பிட வேண்டும். மருத்துவகுணமுள்ள இந்த பழத்திற்கு சுற்றுலா பயணிகள் மத்தயில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. ஒரு கிலோ பெர்சிமென் பழம் ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனை உள்ளூர்வாசிகள் மட்டுமல்லாமல் சுற்றுலா பயணிகளும் அதிகளவில் ஆர்வத்துடன் வாங்கி செல்வது குறிப்பிடத்தக்கது.

## மானாவாரியில் பருத்தி சாகுபடி செய்வது எப்படி?

பழநி, : மானாவாரியில் பருத்தி பயிரிடும் முறை குறித்து வேளாண்துறை ஆலோசனை வழங்கி உள்ளது. மானாவாரியில் பருத்தி பயிரிட எல்.ஆர்.ஏ- 5166, சுமங்கலா, கே-11, எஸ்.வி.பி.ஆர்-2, கே.சி-2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். 45*15 சென்டிமீட்டர் இடைவெளியில் பார்கள் அமைத்து எக்டேருக்கு 15 கிலோ என்ற அளவில் விதைக்க வேண்டும். பஞ்சு நீக்கிய விதையுடன் 3 கிராம் பாலிகோட், கார்பன்டைசிம் 2 கிராம், இமிடர்குளோபரிட் 7 கிராம், சூடா மோனாஸ் ஃப்ளூரசன்ஸ் 10 கிராம், அசோபாஸ் 40 கிராம் கலந்து விதைப்பதால் விதைத்த 45வது நாள் வரை சாறு உறிஞ்சும் பூச்சிகளிலிருந்து பயிரைக் காத்து ஆரம்பத்தில் பயிர் நல்ல வளர்ச்சி அடைய முடியும்.

நுண் ஊட்டச்சத்தாக எக்டேருக்கு சிங்க் சல்பேட் 50 கிலோ அடியுரமாக அளிப்பதால் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்பட்டு விளைச்சல் அதிகரிக்கிறது. பயிரின் வயது 150 நாட்களுக்குள் இருக்கும்பேது, 60 கிலோ தழைச்சத்து இட வேண்டும். 150 நாட்களுக்கு மேல் ஆகும்போது தழைச்சத்து 80 கிலோவிற்கு மேல் இட வேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு தழைச்சத்து 120 கிலோ இட வேண்டும். மேற்காணும் உரத்தில் மணிச்சத்து முழுவதும் மற்றும் தழைச்சத்து, சாம்பல் சத்தினைப் பாதி அடியுரமாகவும் இட வேண்டும்.

களை முளைப்பதற்கு முன் ஃப்ளூகுளோரலின் 2.2 லிட்டர் அல்லது பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும். உயிர் உரமாக 2 ஆயிரம் கிராம் அசோஸ்பரில்லத்துடன் 2 ஆயிரம் கிராம் பாஸ்போ பாக்டீரியா இட வேண்டும்.

ரசாயன உரங்களாக இருந்தால் மண் பரிசோதனை செய்து மண் வள அட்டை பெற்ற பின் உரமிட வேண்டும். பரிசோதனை செய்யாத நிலங்களுக்கு களை முளைப்பதற்கு முன் ஃப்ளூகுளோராலின் 2.2 லிட்டர், பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும்.

அடி உரமாக எக்டேருக்கு 50 கிலோ சிங்க் சல்பேட் அளித்தால் நுண்ஊட்டச் சத்து அளிக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள் அந்தந்தப் பகுதி வேளாண் அலுவலரையோ அல்லது பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறை தெரிவித்துள்ளது.

## மலையோர பகுதிகளில் கனமழை நீடிப்பு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கனமழை நீடித்து வரும் நிலையில் பாலமோரில் 14.3 செ.மீ மழை பெய்துள்ளது. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. நேற்று பகல் முழுவதும் கனமழை தொடர்ந்தது. மலையோர பகுதிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் கனமழை காணப்பட்டது. தொடர் மழையால் அணைகளுக்கு நீர்வரத்தும் அதிகரித்தது. நாகர்கோவில் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது.

கடலோர பகுதிகளில் தொடர்ந்து கடல் சீற்றம் காணப்படுகிறது. மாவட்டம் முழுவதும் நேற்றும் காலை முதல் மழை பெய்தவண்ணம் உள்ளது. விட்டு விட்டு பெய்து வரும் மழையின் காரணமாக மாவட்டத்தில் வெப்பத்தின் தாக்கம் கணிசமாக குறைந்துள்ளது.

தொடர் மழையால் ஆங்காங்கே மரக்கிளைகள் முறிந்து விழுந்து கிராமப்புறங்களில் மின்சாரம் தடைபட்டுள்ளது.

நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 33.60 அடியாக இருந்தது. அணைக்கு 1645 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. பெருஞ்சாணி நீர்மட்டம் 65.10 அடியாக இருந்தது. அணைக்கு 1131 கன அடி தண்ணீர் வரத்து இருந்தது. சிற்றார்-1ல் 9.61 அடியாக நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 155 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது.

சிற்றார்-2ல் 9.71 அடியாக நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 231 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. பொய்கையில் 17.70 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 51.51 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. மாவட்டத்தில் அதிகபட்சமாக பாலமோரில் 143.6 மி.மீ (14.3 செ.மீ) மழை பதிவாகி இருந்தது.

தினத்தந்தி
DAILY THANTHI

## இன்றைய வேளாண் செய்திகள்

### கேரளா, தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கியது; வானிலை ஆய்வு மையம் தகவல்




சென்னை,

கேரளா மற்றும் தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை நேற்று தொடங்கியதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

<u>தென்மேற்கு பருவமழை</u>

தென்மேற்கு பருவமழை கேரளாவில் ஜூன் 1–ந் தேதி தொடங்குவது வழக்கம். இந்த ஆண்டு மழை தொடங்குவது சற்று தாமதம் ஆனது. தென்மேற்கு பருவமழை காலத்தில் தமிழ்நாட்டிலும் கணிசமான அளவு மழை பெய்யும்.

தமிழகத்தில் கடந்த மாதம் முழுவதும் வெயில் வாட்டி எடுத்தது. ஒரு வாரமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்து வந்த கோடை மழையால் வெயிலின் தாக்கம் சற்று குறைந்தது.

இந்த நிலையில் கேரளா மற்றும் தமிழகத்தில் நேற்று தென் மேற்கு பருவமழை தொடங்கியதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் பாலச்சந்திரன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–

<u>கேரளாவில் கனமழை</u>

கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் தென்மேற்கு பருவமழை தொடங்கி இருக்கிறது. தெற்கு அரபிக்கடலில் மேற்கு திசையில் காற்று வலுப்பெற்று காற்று மண்டலத்தின் நடுப்பகுதி வரை பரவி உள்ளது. இதனால் கேரளாவில் பரவலாக நல்ல மழை பெய்து உள்ளது. ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்து இருக்கிறது.

தமிழகத்தை பொறுத்தவரையிலும், ஒரு சில இடங்களில் மழை பெய்து இருக்கிறது. ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்து உள்ளது. அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையில் 9 செ.மீ. மழை பெய்து உள்ளது.

<u>தமிழ்நாட்டில் இடியுடன்கூடிய மழை</u>

அடுத்த 24 மணி நேரத்தை பொறுத்தவரையில் (இன்று), தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யக்கூடும். சென்னையில் மாலை அல்லது இரவு நேரத்தில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

தென்மேற்கு பருவமழை காலத்தில் கேரளாவுக்குத்தான் அதிக மழை கிடைக்கும். தமிழகம் மழை மறைவு பிரதேசமாக இருப்பதால் அந்த அளவு மழை இருக்காது. தென்மேற்கு பருவமழை காலம் ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதத்தில் நிறைவடையும்.

காற்றின் ஈரப்பதம், மேற்கு திசையில் இருந்து வீசும் காற்றின் வேகம், காற்று மண்டலத்தின் நடுப்பகுதியில் காற்று பரவி இருக்கும் அளவு உள்ளிட்ட 6 காரணிகளின் அடிப்படையில் தென்மேற்கு பருவமழையின் அளவு அமையும்.

தென்மேற்கு பருவமழையின் போது தமிழ்நாட்டில் 33 செ.மீ. அளவுக்கு மழை பெய்யும். ஜூன் மாதத்தில் தமிழ்நாட்டில் 5 செ.மீ. அளவில்தான் மழை பதிவு ஆகும். இந்த பருவமழை காலத்தில் தென்மாவட்டங்களின் மேற்கு தொடர்ச்சி

மலையை ஒட்டியுள்ள பகுதிகளில் தான் மழை இருக்கும். அந்த மழை உள்ளே வரும்போது, மற்ற பகுதிகளில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும்.

<u>மழை அளவு</u>

தமிழகத்தில் புதன்கிழமை (நேற்று) காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

பேச்சிப்பாறையில் 9 செ.மீ., குழித்துறை மற்றும் கிருஷ்ணகிரியில் தலா 8 செ.மீ., பூந்தமல்லி மற்றும் தக்கலையில் தலா 6 செ.மீ., சென்னை நுங்கம்பாக்கம், பள்ளிப்பட்டில் தலா 5 செ.மீ., கோதையார், சோழவரத்தில் தலா 4 செ.மீ., திருத்தணி, ஸ்ரீபெரும்புதூர், அறந்தாங்கி, தாமரைப்பாக்கம், குளச்சல், திருவள்ளூர், பாபநாசம், தாம்பரம், நாகர்கோவில், பொன்னேரி ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ. மழை பெய்து உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## விளைச்சலை பெருக்க புதிய ரக விதைகள்



**கா**விரி டெல்டா பாசன விவசாயிகளின் குறுவை சாகுபடிக்காக இந்த ஆண்டு நிச்சயமாக ஜுன் 12–ந் தேதி மேட்டூர் அணை திறக்கமுடியாது. அதனால்தான் குறுவை சாகுபடியை தாமதப்படுத்தவேண்டாம், நிலத்தடி நீரை பயன்படுத்தி விவசாயிகள் குறுவை சாகுபடியை தொடங்கிவிடலாம் என்ற எண்ணத்தில், முதல்–அமைச்சர் ஜெயலலிதா பல சலுகைகளை அறிவித்துள்ளார். காவிரி டெல்டா பாசனம் உள்ள 6 மாவட்டங்களிலும் காவிரியை நம்பி விவசாயம் செய்தால் 4½ லட்சம் ஏக்கர் நிலத்தில் குறுவை சாகுபடி செய்யமுடியும். ஆனால், நிலத்தடி நீரை நம்பி விவசாயத்தை தொடங்கினால் 1½ லட்சம் ஏக்கர் நிலத்தில்தான் குறுவை சாகுபடி செய்யமுடியும். ஆனாலும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கடந்த 2 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு வினியோகித்த அதிக விளைச்சல் தரும் விதைகளால் உற்பத்தி பாதிக்காமல் இருக்கிறது. குறிப்பாக, ‘கோ–51’ ரக விதைகள், வறட்சியையும் தாங்கக்கூடிய ‘அண்ணா–4’ விதைகள், நீரில் மூழ்கினாலும் அதிக பாதிப்பு ஏற்படுத்தாத ‘சி.ஆர்.1009’–சப்1 ஆகிய விதைகள் நல்ல பயனை கொடுத்துவந்தது. இப்போது எல்லா பருவத்தையும் தாங்கி விளைச்சலை தரும் ஒரு புதிய ரக அதிக விளைச்சல் தரும் நெல்விதையை கண்டுபிடிக்க வேளாண் பல்கலைக்கழகம் தீவிர முயற்சி எடுத்துவருவது நிச்சயமாக பாராட்டுக்குரியது.

உலகம் முழுவதிலும் உள்ள அதிக விளைச்சல் தரும் 10 ஆயிரம் ரக விதைகளை வரவழைத்து அதில் எந்த விதை வறட்சியையும், வெள்ளத்தையும் தாங்கக்கூடிய விதையாக நமது விவசாயிகளுக்கு வழங்கலாம்? என்பதை கண்டுபிடிக்க 7 விதைகளை தேர்வு செய்துள்ளனர். அந்த 7 விதைகளையும் ஒட்டுரக வீரிய ஒரேவிதையாக உருவாக்கும் முயற்சியில் துணைவேந்தர் ராமசாமியின் வழிகாட்டுதலில், வேளாண் பல்கலைக்கழகம் இப்போது ஈடுபட்டுவருகிறது. விரைவில் இந்த புதிய ரக நெல்விதையை வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து விவசாயத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த முயற்சிகளை இன்னும் தீவிரப்படுத்தவேண்டும். இந்த விதை குறைவான தண்ணீரை பயன்படுத்தி நிறைய விளைச்சலை தரும் வகையில் இருக்கவேண்டும். வேளாண் பல்கலைக்கழகம் ஒருபக்கம் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாலும், டெல்டா

பகுதியில் உள்ள விவசாயிகள், முன்னோர்கள் சாகுபடி செய்த இன்றைய வேளாண் சமுதாயம் மறந்துபோன பாரம்பரிய நெல்விதைகளை மறுபடியும் மீட்டு விவசாயம் செய்யும் முயற்சியில் மும்முரமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு நெல்லுக்கும் ஒவ்வொரு ரக குணம் கொண்ட 156 வகையான நெல்விதைகளையும் மீண்டும் சாகுபடி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். ஒவ்வொரு பாரம்பரிய நெல்லுக்கும் ஒரு சிறப்பு குணம் உண்டு. 'மாப்பிள்ளை சம்பா', 'குள்ளக்காரு', 'காட்டு யானம்' ஆகிய அரிசி வகைகள், சர்க்கரை வியாதியை கட்டுப்படுத்தும். இதேபோல், திருமணத்துக்குப்பின் பெண்கள் 'கருப்பு கவுனி' என்ற அரிசியையும், மகப்பேறு காலத்தில் 'பூங்காரு' என்ற அரிசியையும், குழந்தை பிறந்தவுடன் 'பால்குடவாலை' என்ற அரிசியையும், காய்ச்சல் ஏற்படும்போது 'இலுப்பை சம்பா' அரிசியை கஞ்சியாகவும் ஆதிகாலத்தில் நமது முன்னோர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இதுமட்டுமல்லாமல், இன்னும் ஏராளமான மருத்துவ குணங்கள் கொண்ட நெல்ரகங்கள் இருந்திருக்கிறது. உணவே மருந்தாகக்கொண்ட நெல்ரகங்கள் இவை. இத்தகைய நெல்விதைகள் எல்லாம் விளைச்சல் குறைவாக இருந்ததால்தான், விவசாயிகள் கடந்த பல ஆண்டுகளாக இதை விளைவிக்காமல் விட்டுவிட்டார்கள்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இதுபோல பாரம்பரிய, மக்களின் உணவை சத்துள்ளதாக ஆக்கும் நெல்ரகங்களை, அதிக விளைச்சலை உருவாக்கும் விதைகளாக தங்கள் ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கும் ஏற்பாடுகளை செய்யவேண்டும். ரசாயன உரங்களை பயன்படுத்தி சத்து இல்லாத நெல் ரகங்களை பயன்படுத்துவதைவிட, மருத்துவ குணம்கொண்ட பாரம்பரிய நெல் ரகங்களை பயன்படுத்தும் வகையில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் விவசாய புரட்சியை உருவாக்க வேண்டும்.

# ஈரோடு மார்க்கெட்டுக்கு மீன் வரத்து அதிகரிப்பு



ஈரோடு,

மீன்பிடி தடைகாலம் நீங்கியதால் ஈரோடு மார்க்கெட்டுக்கு மீன் வரத்து அதிகரித்துள்ளது. வஞ்சிரம் மீன் நேற்று கிலோ ரூ.600–க்கு விற்பனை ஆனது.

<u>மீன்பிடி தடைகாலம்</u>

ஈரோடு ஸ்டோனி பாலம் அருகில் 50–க்கும் மேற்பட்ட மீன் கடைகள் செயல்பட்டு வருகிறது. இங்கு பெரும்பாலும் கடல் மீன்களே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தூத்துக்குடி, ராமேஸ்வரம், நாகப்பட்டினம், காரைக்கால், கேரளா, கடலூர் ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகள் மொத்தமாக மீன்களை வாங்கி வந்து இங்கு விற்பனை செய்து வருகிறார்கள். இந்த மீன்களை ஈரோடு மற்றும் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த ஏராளமான மீன் பிரியர்கள் வாங்கிச்செல்வார்கள்.

கடந்த ஏப்ரல், மே ஆகிய 2 மாதங்கள் மீன்கள் இனபெருக்க காலம் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் சென்று மீன்பிடிக்க அரசு தடை விதித்து இருந்தது.

அதைத்தொடர்ந்து கடந்தவாரம் மீன்பிடி தடைகாலம் நீங்கியது. பின்னர் மீனவர்கள் வழக்கம்போல் கடலுக்கு சென்று மீன் பிடிக்கத்தொடங்கினார்கள். அதன்காரணமாக ஈரோடு மீன் மார்க்கெட்டுக்கு மீன் வரத்து அதிகரித்துள்ளது.

வரத்து அதிகரிப்பு

இதுகுறித்து ஈரோடு ஸ்டோனி பாலம் அருகில் மீன்கடை வைத்திருக்கும் மீன் வியாபாரி சின்ராசு கூறியதாவது:–

ஈரோடு மீன் மார்க்கெட்டுக்கு வழக்கமான நாட்களில் 3 முதல் 4 டன் வரை மீன்கள் விற்பனைக்கு வரும். ஆனால் மீன்பிடி தடைகாலம் இருந்தபோது மீன் வரத்து குறைத்து 1 முதல் 1½ டன் வரையிலான மீன்களே விற்பனைக்கு வந்தன. அதன்காரணமாக அனைத்து வகை மீன்களும் கிலோவுக்கு ரூ.100 முதல் ரூ.150 வரை விலை உயர்ந்தது.

இந்தநிலையில் மீன்பிடி தடைகாலம் கடந்த வாரம் நீங்கியது. அதனால் மீண்டும் ஈரோடு மீன் மார்க்கெட்டுக்கு அதிக அளவில் மீன்கள் வரத்தொடங்கி உள்ளன. ஆனால் விலை குறையவில்லை. பழைய விலையே நீடிக்கிறது. அடுத்தவாரம் மீன் விலை குறைய அதிக அளவில் வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு மீன் வியாபாரி சின்ராசு கூறினார்.

வஞ்சிரம்

ஈரோடு மீன் மார்க்கெட்டில் நேற்று விற்பனையான மீன்கள் விலை கிலோவில் வருமாறு:–

வஞ்சிரம் மீன் அதிகபட்சமாக ரூ.600–க்கு விற்பனையானது. மேலும் வெள மீன், சீலா மீன், பார மீன், கடல் கொடுவா ஆகிய மீன்கள் ரூ.350–க்கும், சங்கரா மீன் ரூ.250–க்கும், இறால் மீன் ரூ.450–க்கும், சுறா மீன் ரூ.500–க்கும், அயல மீன் ரூ.180–க்கும், மத்தி மீன் ரூ.120–க்கும் விற்பனையானது. கடல் நண்டு கிலோ ரூ.300–க்கு விற்பனையானது.

**பாலமோர் பகுதியில் 14 செ.மீ. மழை பதிவு பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்தது**



குமரி மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது. பாலமோர் பகுதியில் 14 செ.மீ. மழை பதிவானது. இந்த மழையினால் பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்தது.

தொடர் மழை

கோடை காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து குமரி மாவட்ட பகுதிகளில் கடந்த 3 நாட்களாக விட்டு, விட்டு சாரல் மழை பெய்து கொண்டிருக்கிறது. நாகர்கோவில் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் பகல் மற்றும் இரவு நேரங்களில் தொடர்மழை பெய்து கொண்டிருக்கிறது. இதனால் பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ– மாணவிகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில்

பணிபுரியும் ஊழியர்கள், பல்வேறு பணிகள் நிமித்தமாக செல்லக்கூடியவர்கள் குடைகளைப் பிடித்தவாறு சாலைகளில் நடந்து சென்றனர்.

இதேபோல் கன்னியாகுமரி, கொட்டாரம், பூதப்பாண்டி, திட்டுவிளை, கடுக்கரை, காட்டுப்புதூர், அருமநல்லூர், ஞாலம், இறச்சகுளம், அஞ்சுகிராமம், மயிலாடி, அழகப்பபுரம், ஆரல்வாய்மொழி, செண்பகராமன்புதூர், தோவாளை உள்ளிட்ட பகுதிகளிலும் விட்டு, விட்டு சாரல் மழை பெய்தது. இந்த மழையால் காளிகேசம் பகுதியில் உள்ள காட்டாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதேபோல் நாகர்கோவில் சோழன்திட்டை அணையில் மறுகால் பாய்ந்து, வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் வாய்க்கால்கள், ஆறுகள் போன்றவற்றிலும் மழை வெள்ளம் பாய்ந்தோடியது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கி நின்றது. நாகர்கோவில் ஊட்டுவாழ்மடம் பகுதியில் நெல் சாகுபடி செய்யப்பட்ட வயலில் மழை வெள்ளம் தேங்கி நின்றது.

14 செ.மீ. மழை

நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.) வருமாறு:–

பேச்சிப்பாறை–93.6, பெருஞ்சாணி–75, சிற்றார் 1–84.2, சிற்றார் 2–75.4, பொய்கை–13.2, மாம்பழத்துறையாறு–52, முக்கடல்–48, இரணியல்– 11, ஆணைக்கிடங்கு–58, குளச்சல்–28, குருந்தங்கோடு–24, கோழிப்போர்விளை–47.2, முள்ளங்கினாவிளை–72, புத்தன் அணை–77.2, கொட்டாரம்–12.6, மயிலாடி–10.4, பாலமோர்–143.6, நாகர்கோவில்–26.2, பூதப்பாண்டி–24.2, சுருளோடு–70.1, கன்னிமார்–37.5 என்ற அளவில் மழை பதிவாகி இருந்தது.

இதில் அதிகபட்சமாக பாலமோர் பகுதியில் 14 செ.மீ.க்கு அதிகமாக மழை பெய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் ஒரு அடி உயர்வு

குமரி மாவட்ட அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை அதிகமாக இருப்பதால் அணைகளுக்கு வரும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 1245 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 1131 கன அடி தண்ணிரும், சிற்றார்–1 அணைக்கு 155 கன அடி தண்ணீரும், சிற்றார்–2 அணைக்கு 231 கன அடி

**கோழித்தீவன மூலப்பொருட்களில் பூஞ்சான நச்சு தாக்கம் அதிகரிப்பு பரிசோதனைக்கு பிறகு பயன்படுத்த அறிவுறுத்தல்**

தண்ணீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு 8 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது.

இதனால் அணைகளின் நீர்மட்டம் கிடு கிடுவென உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 32.65 அடியாக இருந்த பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று 33.60 அடி ஆனது. இதன் மூலம் அணையின் நீர் மட்டம் சுமார் ஒரு அடி உயர்ந்தது. 63.90 அடியாக இருந்த பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 1 அடி உயர்ந்து நேற்று 65.10 அடியாக அதிகரித்தது. 9.08 அடியாக இருந்த சிற்றார்–1 அணை நீர்மட்டம் 9.61 அடியாகவும், 9.18 அடியாக இருந்த சிற்றார்–2 அணை நீர்மட்டம் 9.71 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 17.70 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் 51.51 அடியாகவும் உயர்ந்தன.

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. உப்பளத்தொழிலும் பாதிக்கப்பட்டு உள்ளது.

கோழித் தீவன மூலப் பொருட்களில் பூஞ்சான நச்சு தாக்கம் அதிகமாக இருப்பதால், அவற்றை பரிசோதனைக்கு பிறகு பயன்படுத்த வேண்டும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் அறி வுறுத்தப்பட்டு உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அடுத்த 3 நாட்கள் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று 10 மி.மீட்டரும், நாளை 8 மி.மீட்டரும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்று தென்மேற்கு திசையில் இருந்து மணிக்கு 7 கி.மீட்டர் வேகத்தில் வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 96.8 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 80.6 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 65 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 52 சதவீதமாகவும் இருக்கும்.

பூஞ்சான நச்சு

தென்மேற்கு பருவமழைக்காலம் தொடங்குவதற்கான சாத்திய கூறுகள் மிகவும் வலுவடைந்து வருவதால், இன்று அல்லது நாளை பருவமழை பெய்ய தொடங்கும். அதனை தொடர்ந்து காற்றின் வேகம் படிப்படியாக உயர்ந்து காணப்படும்.

இதனால் வெயிலின் தாக்கமும், அதன் காரணமாக அயற்சியோ அல்லது அதிர்ச்சியோ இனி கோழிகளில் காணப்படாது. கொள்முதல் செய்யப்படும் மக்காச்சோளம் மற்றும் கடலை புண்ணாக்கு போன்ற தீவன மூலப்பொருட்களில் பூஞ்சான நச்சு தாக்கம் அதிகமாக காணப்படுவதால், அவற்றை பரிசோதனை செய்து பின்னர் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## 1,250 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தஞ்சையில் இருந்து காட்பாடிக்கு கொண்டு செல்ல அரிசி மூட்டைகளை தொழிலாளர்கள் லாரியில் இருந்து சரக்குரெயிலில் ஏற்றிய போது எடுத்த படம்.

தஞ்சையில் இருந்து காட்பாடிக்கு 1,250 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

புழுங்கல்அரிசி

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் பிள்ளையார்பட்டி, நாஞ்சிக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருந்து லாரிகளில் புழுங்கல்அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன.

பின்னர் இந்த அரிசி மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,250 டன் புழுங்கல்அரிசி ஏற்றப்பட்டது. இதையடுத்து இந்த சரக்குரெயில் தஞ்சையில் இருந்து வேலூர் மாவட்டம் காட்பாடிக்கு புறப்பட்டு சென்றது.

## பருத்தி குவிண்டால் ரூ.5 ஆயிரத்து 39-க்கு விற்பனை

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த ஏலத்தில் பருத்தி குவிண்டால் அதிகபட்சமாக ரூ.5 ஆயிரத்து 39-க்கு விற்பனையானது.

ஏலத்தில் பருத்தி விற்பனை

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பருத்தி மகசூல் செய்யப்பட்டது. தற்போது பருத்தி எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் 5 ஆயிரத்து 192 எக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள், பருத்தி பஞ்சுகளை விற்பனை செய்திட ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் மறைமுக ஏலம் விடப்படுவது வழக்கம். அதன்படி மாவட்டத்தில் திருவாரூர், குடவாசல், வலங்கைமான் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் பருத்தி கொண்டு வந்து ஏலத்தில் விற்பனை செய்தனர்¢.

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இந்த ஆண்டிற்கான பருத்தி ஏலம் தொடங்கியது. இதில் ஊட்டியாணி, சேந்தங்குடி, கங்களாஞ்சேரி, கல்லிக்குடி, பழைய வலம், மழையூர், சித்தாநல்லூர், எட்டியலூர், பிளாக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் 184 லாட்டுகளில் (மூட்டை) பருத்தி பஞ்சுகளை ஏலத்துக்கு வைத்திருந்தனர். பஞ்சுகளை செம்பனார்கோவில், சேலம்

கொங்கனாபுரம், திருப்பூர், விழுப்புரம், கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் தாங்கள் கேட்கும் தொகையை ஏலச் சீட்டில் எழுதி ஏலப்பெட்டியில் போட்டிருந்தனர்.

350 குவிண்டால்

இதையடுத்து மாலை வேளாண் விற்பனைக்குழு துணை இயக்குனர்¢ மனோகரன், செயலர் சேரலாதன், கண்காணிப்பாளர் ரமணி ஆகியோர் ஏலப்பெட்டியை திறந்து வியாபாரிகள் கேட்ட விலையை படித்தனர்¢. இதில் அதிகபட்சமாக பருத்தி குவிண்டாலுக்கு ரூ.5 ஆயிரத்து 39 விலையும், குறைந்தபட்சமாக ரூ. 4ஆயிரத்து 569 விலையும் கேட்கப்பட்டிருந்தது. சராசரியாக பருத்தி குவிண்டால் ரூ. 4 ஆயிரத்து 869-க்கு விற்பனையானது. இந்த ஏலத்தில்¢ 350 குவிண்டால் பருத்தி விற்பனையானது.

## மேலமலையனூரில் தரமற்ற பூச்சி மருந்துகளால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு முகாம்



மேல்மலையனூர்,

தரமற்ற பூச்சி மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து மேல்மலையனூரில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

விழிப்புணர்வு முகாம்

மேல்மலையனூர் வேளாண்மைத்துறை சார்பில் தரமற்ற பூச்சி மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விவசாயிகள், மருந்து உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் ஆகியோருக்கான விழிப்புணர்வு முகாம் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக மன்ற கூடத்தில் நடைபெற்றது. இதற்கு ஒன்றியக்குழு தலைவர் விஜயா தலைமை தாங்கி, முகாமை தொடங்கி வைத்தார். உதவி வேளாண்மை அலுவலர்கள் ரகுபதி, தமிழ்மணி, வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் தொழில் நுட்ப மேலாளர் ஸ்ரீதேவி வரவேற்றார்.

காலாவதி மருந்துகள் விற்கக்கூடாது

முகாமில் வேளாண்மை உதவி அலுவலர் பெரியசாமி கலந்து கொண்டு தரமற்ற பூச்சி மருந்துகளால் ஏற்படும் தீமைகள் குறித்தும், மருந்து விற்பனையாளர்கள் உரிய ரசீதுடன் பூச்சி மருந்துகள் விற்பனை செய்ய வேண்டும், காலாவதியான மருந்துகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்யக்கூடாது என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இதில் உதவி வேளாண் தொழில்நுட்ப அலுவலர் ரவி உள்பட விவசாயிகள், பூச்சி மருந்து உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் சக்திவேல் நன்றி கூறினார்.